# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 554/2025

**Date : 26.03.2026** **PW6 / LW2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏழுமலை | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | பெரியசாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பெரும்பட்டு | வயது | 65 |
| எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் பெரும்பட்டு கிராமத்தில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விருதாம்பாளை தெரியும்.அவர் எங்கள் ஊரைசேர்ந்தவர். எதிரிகளை தெரியும். அவர்களும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 17.04.2023 அன்று மாலை 04.00 மணியளவில் நான் எனது நிலத்தில் இருந்தபோது பக்கத்து நிலத்தில் அ.சா.1 விருத்தாம்பாளும் அவரது கணவர் ஆறுமுகமும் மற்றும் 1, 2 எதிரிகளும் ஒருவரை ஒருவர் திட்டி பேசிக்கொண்டிருந்தார்கள். யார் யாரை திட்டி பேசிக்கொண்டிருந்தார்கள் என்று தெரியாது. அப்போது 1 வது எதிரி நாகப்பன் எ) சிவபெருமாள் அ.சா.1 விருத்தாம்பாளை தடியால் தொடையில்அடித்தார். பின்னா நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1ன் நிலமும் எதிரிகள் நிலமும் அருகருகே உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.1க்கும் எதிர்களுக்கும் என்ன விரோதம் என்று எனக்கு தெரியாது. நான் பக்கத்து கொல்லையில் இருக்கும் போது எதிரிகளும் அ.சா.1ம் ஒருவரை ஒருவர் மாறி மாறி திட்டிக் கொண்டதை பார்த்தேன்.எனது நிலமானது அ.சா.1ன் நிலத்திற்கு பக்கத்து நிலமாகும். சம்பவத்தை நான் எனது நிலத்தில் இருந்து தான் பார்த்தேன். நான் போலீசார் விசாரிக்கும்போது தற்போது கூறிய சங்கதிகளை தான் கூறியுள்ளேனா என்றால் அவ்வாறுதான் கூறியுள்ளேன். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை எப்போது

விசாரணை செய்தார்கள் என்றால் அதைப் பற்றி தற்போது எனக்கு நினைவில்லை. அ.சா.1 விருத்தம்பாளுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக அ.சா.1 எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னாலும் அந்த புகாருக்கு அனுசரனையாக நான் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.